2026 பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

C.C. நெம்பர் : 3/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – மலைச்சாமி |
| தகப்பனார் பெயர்: | ராமத்தேவர் |
| ஊர்: | சீலமுத்தையாபுரம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயக்கூலி |
| வயது : | 45 |

11.02.2026

(எதிரி நீதிமன்ற காவலில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, சீலமுத்தையாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயக்கூலியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி அய்யனார் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் 4 சகோதரர்கள் ஆவார்கள். என்னுடன் பிறந்த சகோதரர் பெருமாள் என்பவரை ஆஜர் எதிரி அடித்து கொன்றுவிட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் நீதிமன்ற விசாரணைக்கு பின்பு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு, தற்போது சிறையில் உள்ளார். நான் எனது ஊரில் ஒரு சிறிய பெட்டிக்கடை

வைத்துள்ளேன். 17.09.2025ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் நானும், எனது மாமா ராமு என்பவரும் எனது கடையில் இருந்தோம்.

2. அப்போது ஆஜர் எதிரி அய்யனார் எனது கடைக்கு வந்தார். எதிரி மீதுள்ள இறந்த எனது அண்ணன் பெருமாள் கொலை வழக்கில் நீ தான் புகார் கொடுத்துள்ளாய், நீ தான் சாட்சிகளை அழைத்துக்கொண்டு சாட்சி சொல்ல போகிறாய், நடந்தது நடந்துவிட்டது, அவ்வழக்கில் சாட்சி சொல்லக்கூடாது என்றும் கூறினார். அப்போது நான் இறந்த பெருமாள் அண்ணனை அடித்துக் கொன்றுவிட்டாய், அண்ணன் இறந்துவிட்டதால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது, நான் சாட்சிச் சொல்வேன் என்று கூறினேன். நான் சாட்சி சொல்வேன் என்று சொன்னதற்கு எனது அம்மாவை தேவுடியா மகனே என்று குறிப்பிட்டு அசிங்கமாக திட்டினார். எவ்வாறு பேசினாலும் நான் சாட்சி சொல்லப்போவேன் என்று சொன்னதற்கு உன்னை உயிரோடு விட்டுவைத்தது தவறு, உன்னையும் கொலை செய்திருக்க வேண்டும் என்று மிரட்டினார்.

3. அதன்பின்னர் எனது மாமா ராமு என்பவர் எங்களை விலக்கிவிட்டு, சத்தம் போட்டு அனுப்பிவிட்டார். நான் எனது வீட்டிற்கு சென்று எனது மனைவியிடம் ஆஜர் எதிரி என்னை சாட்சி சொல்லாமல் இருக்கும்படி மிரட்டிய விவரத்தை சொல்லி அவர் என்னை கொலை செய்துவிடுவார் என்று பயமாக உள்ளதாக கூறினார். அதன்பின்பு ஆஜர் எதிரி ஜாமீனில் வெளிவந்துள்ளதால் பயமாக இருந்தது, மறுநாள் 18.09.2025ம் தேதி காலை வருசநாடு காவல்நிலையம் சென்று 17.09.2025ம் தேதி நடந்த சம்பவம் குறித்து எங்கள் ஊரில் எழுத படிக்க தெரிந்த பெரியவர்களை வைத்து எழுதி படித்து புரிந்த கொண்ட பின் கையொப்பம் செய்து புகார் கொடுத்தேன். எனக்கு படிக்க தெரியும், புகாரில் உள்ள விபரங்கள் குறித்து படித்து தெரிந்துக்கொண்டேன், அது **அ.சா.ஆ.1–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

4. என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் 4 ஆண்பிள்ளைகள், 3 பெண்பிள்ளைகள் ஆவோம். சொத்து பிரச்சனை சம்பந்தமாக என்னுடன் பிறந்த சகோதரர்களுக்கிடையில் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவ தேதி 17.09.2025 ம் தேதி மாலை 6.00 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 9 கி.மீ. தூரம் இருக்கும். நான் 18.09.2025 ம் தேதி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் கையொப்பம் செய்த இடத்திற்கு அருகிலோ, புகாரின் முன்பகுதியிலோ 18.09.2025 ம் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ராமு என்பவர் எனது அக்கா கணவர் என்றால் சரிதான், அவர் பழக்கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் இல்லை.

5. சம்பவ தேதியில் எதிரி நத்தம் காவல்நிலையத்தில் Condition கையொப்பம் செய்துக்கொண்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது, பிணையில் வெளியில் இருந்த விபரம் தெரியும். கையொப்பம் போட்ட விபரம் தெரிந்துக்கொண்டு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் பிணையில் வெளியில் வந்து சுமார் 20 நாட்கள் இருக்குமா என்றால் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் இருக்கும். எதிரி வெளியில் இருந்தால் பிரச்சனை ஏற்படும் என்பதால் எதிரி மீது பொய் புகார் கொடுத்து அவரை சிறையில் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, மாதம், வருடம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அவர் நத்தத்தில் இருந்துக்கொண்டு பிணை கையொப்பம் செய்துக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை இருந்ததால் சொத்தை நானே அபகரிக்க வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. எதிரி வெளியில் இருந்தால் மொத்த சொத்தையும் நான் அனுபவிக்க முடியாது என்பதால் கொடுக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

6. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் அன்றைய தேதியில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், சம்பவம் நடக்காததால் மறுநாள் 18.09.2025ம் தேதி என் மனைவியின் ஆலோசனையின் பேரில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, சம்பவம் நடந்தது உண்மை. நான் சொல்வதுபோல் எனது அக்காவின் கணவர் ராமு சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், இவ்வழக்கிற்காக அவர் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன எனது அண்ணனை என்னுடன் பிறந்த சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து கொலை செய்து விட்டு எதிரி மீது திருப்பி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொன்னதுபோல், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை கொலை வழக்கில் சாட்சி சொல்லக்கூடாது என்று மிரட்டவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.11 18:15:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.02.2026

2026 பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

C.C. நெம்பர் : 3/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – ராமு |
| தகப்பனார் பெயர்: | முத்துச்சாமித்தேவர் |
| ஊர்: | தண்டியன்குளம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயக்கூலி |
| வயது : | 59 |

11.02.2026

(எதிரி நீதிமன்ற காவலில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.குருவம்மாள் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, தும்மக்குண்டு பஞ்காயத்து, தண்டியன்குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயக்கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மலைச்சாமி எனது மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரி அய்யனார் எனது மைத்துனர் ஆவார். அ.சா.1 மற்றும் எதிரி உடன்பிறந்தவர்கள் ஆவார்கள். மலைச்சாமி சீலமுத்தையாபுரத்தில் கோவில்காடு என்ற பகுதியில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறார். 17.09.2025 ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் நானும் மலைச்சாமியும் அவரது கடையில் இருந்தோம். அந்த நேரத்தில் ஆஜர் எதிரி அய்யனார் அங்கு வந்தார். அப்போது

எனது மைத்துனர் பெருமாள் கொலை வழக்கில் சாட்சி சொல்லக்கூடாது என்று அ.சா.1 மலைச்சாமியை மிரட்டினார். கொலை வழக்கில் சாட்சி சொன்னால் எதிரிக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வேண்டும் என்று மிரட்டினார், அதற்கு மலைச்சாமி அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்க முடியாது என்று கூறினார்.

2. அப்போது ஆஜர் எதிரி மலைச்சாமியை பார்த்து பெருமாள் இறந்த தேதியன்றே மலைச்சாமியை முடித்திருக்க வேண்டும், அவ்வாறு விட்டு வைத்தது தவறாகிவிட்டது என்று மிரட்டினார். எதிரிக்கு சாதகமாக கொலை வழக்கில் சாட்சியம் சொல்லவில்லை என்றால் எல்லோரையும் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார். நான் அன்றைய தேதிக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, இருவரையும் விலக்கிவிட்டேன். ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு நிமிடமும் எதிரியால் எங்களுக்கு கொலைமிரட்டல் வந்துக்கொண்டே இருக்கிறது, அவர் எப்போது எங்களை என்ன செய்வார் என்ற உயிர்பயத்தில் வாழ்ந்து வருகிறோம். விலக்கிவிட்ட பின் அவர் சென்றுவிட்டார், மலைச்சாமி வீட்டிற்கு சென்றுவிட்டார். மறுநாள் 18.09.2025ம் தேதி வருசநாடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் தேதியிலேயே போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. நான் என்ன வேலை, எந்த ஊரில் செய்து வருகிறேன் என்றால் தண்டியன்குளத்தில் விவசாயம் செய்து வருகிறேன். என் பரம்பரை சொத்தில் நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி சம்பவ தேதியில் பிணையில் இருந்து வந்துவிட்டார் என்றால் சரிதான், எத்தனை நாட்கள் இருக்கும் என்றால் 28 நாட்கள் இருக்கும். அப்போது எதிரி Condition கையொப்பம் நத்தம் காவல்நிலையத்தில் செய்துக்கொண்டிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 புகார் கொடுக்கும்போது நான் உடன் சென்றிருந்தேனா என்றால் இல்லை. எதிரிக்கும் அவரது சகோதர்களுக்கிடையில் சொத்து பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியும், நானே பலமுறை பிரச்சனையை சமரசம் செய்ய முயற்சித்துள்ளேன். சம்பவ தேதியில் சம்பவம் மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான்.

4. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரியும் அவரது சகோதரர்களுக்கிடையில் உள்ள சொத்து பிரச்சனையால் அ.சா.1 புகார் கொடுத்ததால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி வெளியில் இருந்தால் அவரது சொத்தை சகோதரர், சகோதரரிகள் அனுபவிக்க முடியாது என்பதால் தாக்கல் செய்யப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. பெருமாள் கொலை வழக்கில் நானும் சாட்சியாக உள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் எதிரி சாட்சியம் அளிக்கக்கூடாது என்று அ.சா.1 யை மிரட்டியிருந்தால், என்னையும் எதிரி மிரட்டியிருப்பார் என்றால் சரியல்ல, அன்றைய தேதியில் அ.சா.1 யை மிரட்டினார். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அ.சா.1 அன்றைய தேதியிலேயே புகார் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் மறுநாள் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.11 18:15:09 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.02.2026

2026 பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

C.C. நெம்பர் : 3/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – சுமதி |
| கணவர் பெயர்: | மலைச்சாமி |
| ஊர்: | சீலமுத்தையாபுரம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 35 |

11.02.2026

(எதிரி நீதிமன்ற காவலில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, சீலமுத்தையாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி அய்யனார் எனது கணவர் அ.சா.1–னுடன் பிறந்த சகோதரர் ஆவார். எனது கணவர் சீலமுத்தையாபுரத்தில் ஊர்க்கோவில் அருகே பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறார். 17.09.2025ம் தேதி மாலை 6.00 மணியளவில் எனது கணவரும், எனது கணவரின் அக்கா கணவர் ராமுவும் எனது கணவரின் பெட்டிக்கடையில் இருந்தபோது, ஆஜர் எதிரி அய்யனார் அங்கு வந்து, எனது மச்சான் பெருமாளை கொலை செய்த வழக்கில் சாட்சி

சொல்லக்கூடாது என்றும், தேவுடியா மகனே என்று அசிங்கமாக பேசியும் மிரட்டினார், உன்னையும் பெருமாளை கொலை செய்தது போலவே, கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்றும், எனது கணவர் இரவு 8.00 மணியளவில் வீட்டிற்கு வந்து என்னிடம் சொல்லி பயமாக உள்ளதாக அழுதார்.

2. அன்றிரவே புகார் கொடுக்கலாம் என்று கணவர் கூறினார், ஆனால் அவருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் மறுநாள் புகார் கொடுக்கலாம் என்று கூறிவிட்டேன், மறுநாள் 18.09.2025 ம் தேதி காலை நானும், எனது கணவரும் வருசநாடு காவல்நிலையத்திற்கு சென்றோம், அவர் புகார் கொடுத்தார், நான் வெளியில் நின்றுக்கொண்டிருந்தேன். சம்பவம் நடந்த சமயத்தில் ராமு இருவருக்குள் பிரச்சனை வேண்டாம் என்று விலக்கிவிட்டதாக எனது கணவர் கூறினார். புகார் கொடுக்க அன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. சம்பவம் நடந்த விபரம் பற்றி எனக்கு எனது கணவர் சொல்லி தெரியும் என்றால் சரியல்ல, எனது கணவரும், ராமுவும் என்னிடம் கூறினார். உண்மையில் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றிருந்தால் புகாரில் நானும் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்றால் நான் வருசநாடு ஊருக்குள் இருந்தேன், எனது கணவர் காவல்நிலையம் சென்றார்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.11 18:15:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.02.2026

2026 பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

C.C. நெம்பர் : 3/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 – அசோக் |
| தகப்பனார் பெயர்: | பாலுச்சாமி |
| ஊர்: | முறுக்கோடை |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | மாட்டு வியாபாரம் |
| வயது : | 43 |

11.02.2026

(எதிரி நீதிமன்ற காவலில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, முறுக்கோடையில் வசித்து வருகிறேன். நான் மாட்டு வியாபாரம் செய்து வருகிறேன். 9 வது மாதம், 2025 ம் ஆண்டு நான் மாட்டு வியாபாரத்திற்காக சீலமுத்தையாபுரத்திற்கு சென்றேன். அங்கு மலைச்சாமியின் பெட்டிக்கடையில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது அந்த பெட்டிக்கடைக்கு வருசநாடு காவல்நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் காலை சுமார் 9.00 மணிக்கு வந்தார்கள். அப்போது போலீசார் அந்த இடத்தில் இருந்தவர்கள் விசாரித்தார்கள். புகைப்படம் எடுத்தார்கள்.

2. நானும், ஜெயபாண்டியன் என்பவரும் அங்கு இருந்தோம். எங்களை சாட்சியாக இருக்கும்படி போலீசார் கேட்டுக்கொண்டார்கள். சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்தார்கள், என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.2–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஜெயபாண்டியன் என்பவர் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்தார். போலீசார் அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. எனக்கு எழுதப் படிக்க தெரியாது. பார்வை மகஜரில் எழுதிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அய்யனாருக்கும், மலைச்சாமிக்கும் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக விசாரணை செய்ததாக கூறினார். நான் சம்பவ இடத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.11 18:15:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.02.2026